சாட்சி ஆஜர், சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்.

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:

எங்களுடைய திருமணம் பெரியவர்களால் நிச்சயிக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். எனது கணவருடைய குடும்ப சொத்துக்களை விட எங்களது பெற்றோரின் குடும்ப சொத்துக்கள் அந்த காலத்திலேயே அதிகாமனது என்றால் சரியல்ல, நாங்கள் சமூகத்தில் எனது கணவரின் குடும்பத்தை விட அந்த காலத்தில் மதிப்புமிக்க குடும்பத்தாராக வாழ்ந்து வந்தோம் என்று சொன்னால் சரிதான். நல்ல பேர் வாங்கிய குடும்பம் தான் என் பெற்றோர் குடும்பம், என் அப்பா காங்கிரஸ் தியாகி. எனது குழந்தைகள் பிறந்து, வளர்ந்து படித்தது எல்லாம் என் பெற்றோரின் வீட்டில் தான் என்றால் சரிதான். இரண்டு வருடங்கள் இங்கு தான் இருந்தார்கள். ஆனால் படிப்பு சரியில்லை என்பதால் என் பெற்றோர்கள் வீட்டில் தான் வளர்ந்து வந்தார்கள். எனது பெற்றோர்களுக்கு எந்த கிராமம் என்றால் மேட்டுப்பாளையம் அருகே உள்ள தாசனூர் கிராமம். எனது குடும்ப அட்டை எல்லாம் தாசனூர் கிராமத்தில் தான் உள்ளதென்று சொன்னால் சரிதான். எந்த வருடத்திலிருந்து எந்த வருடம் வரை தாசனூர் கிராமத்தில் நான் குடியிருந்து வருகிறேன் என்றால் திருமணத்திற்கு பின்னர் 10 வருடங்கள் ஆலாம்பாளையத்தில் குடியிருந்து வந்தோமம் அதன் பின்னிட்டு 1980-லிருந்து தற்போது வரை தாசனூர் கிராமத்தில் தான் குடியிருந்து வருகிறேன். திருமணத்திற்கு பின்னிட்டு 10 வருடங்கள் ஆலாம்பாளையத்தில் குடியிருந்து வந்தோம் என்பதை காட்ட குடும்ப அட்டை போன்ற எந்தவித ஆவணங்களும் இந்த வழக்கு சம்மந்தமாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். திருமணத்திற்கு பின்னிட்டு, எனக்கும், எனது கணவருக்கும் சரியான குடும்ப உறவு இல்லாததால் மனஸ்தாபத்தின் அடிப்படையில் நான் என் கணவரை விட்டு பிரிந்து எனது அப்பா வீட்டிற்கு சென்று விட்டேன் என்றால் சரியல்ல. எங்களுக்குள் மனஸ்தாபம் இருந்தது, ஆனால் அதன் காரணமாக நான் என் அப்பா வீட்டிற்கு செல்லவில்லை. மேட்டுபாளையத்தில் ஜெராக்ஸ் கடை வைத்திருந்தோம். சிமெண்ட் வியாபாரம் செய்தோம். அதனால் அதற்காக நான் அங்கு சென்று விட்டோம். அதற்கான மூலதனம் எனது பெற்றோர் வீட்டில் தான்

செய்து கொடுத்தார்கள் என்று சொன்னால் சரிதான். ராஜ் புளூ மெட்டல்ஸ்காக எனது கணவரும், எனது மச்சான்டாரும் சத்தியமங்கலம் நில வள வங்கியில் ரூ.9 லட்சத்தை கடனாக பெற்றிருந்தார்கள் என்று சொன்னால் சரிதான். எனது கணவர் இறக்கும் வரை அந்த கடன் அடைக்கப்படவில்லை என்றால் சரிதான். அந்த கடன் 18 லட்சமாக அதிகரித்து விட்டது. அந்த கடனில் எனது கணவருக்குண்டான பங்கினையும் வாதி குணசேகரன் தான் செலுத்தினார் என்று சொன்னால் சரியல்ல, நாங்கள் தான் செலுத்தினோம். அந்த கடனை செலுத்தியதற்கான ரசீதினை நாங்கள் பெற்றோமா என்றால் பெற்றோம், அந்த ரசீதை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் தாக்கல் செய்துள்ளோம். நான் அது போல எந்த ரசீதையும் இந்த வழக்கு சம்மந்தமாக தாக்கல் செய்யவில்லை என்றும், ஏற்கனவே அ.வ.எண்.210/2015 என்ற வழக்கிலும் கடனை செலுத்தி ரசீதை பெற்றுள்ளோம் என்றும், தாக்கல் செய்கிறோம் என்றும் சாட்சியமளித்துள்ளேன் என்றும், ஆனால் அது போல ரசீதினை இன்று வரை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சொல்லப்படுவது போல மேற்படி கடனை நாங்கள் செலுத்தவில்லை என்றும், அதனால் எங்களுக்கு ரசீதும் வழங்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. ராஜ் புளூமெட்டல்ஸை எனது மச்சாண்டார் தான் நிர்வகித்து வந்தார் என்றும், அவரது இறப்பிற்கு பின்னிட்டு அவரது மகனான வாதி குணசேகரன் தான் நிர்வகித்து வருகிறார் என்றும், அதனை அவரே நிர்வகித்து கொள்ளலாம் என்றும் நான் ஏற்கனவே சாட்சியமளிக்கப்பட்டுள்ள சூழ்நிலையில், அந்த ராஜ் புளூமெட்டல்ஸ் நிறுவனத்திற்காக வாங்கிய கடன் ரூ.18 லட்சத்தை நான் செலுத்த வேண்டிய அவசியம் என்னவென்றால் ராஜ் புளூமெட்டல்ஸ் நிறுவனத்திற்காக எங்களது சொத்துக்கள் எல்லாம் அடமானம் வைக்கப்பட்டிருந்தது, அந்த கடனை செலுத்தினால் மட்டுமே எங்களது நிலம் மீட்க முடியும் என்பதால் எங்கள் நிலத்தை மீட்பதற்காக கடனை கட்டினோம். ராஜ் புளூமெட்டல்ஸ் நிறுவனத்திற்காக சத்தியமங்கலம் நில வள வங்கியில் கடன் பெற்ற பொழுது எந்தெந்த சொத்துக்களை அடமானமாக வைக்கப்பட்டதென்றால் புல எண்.81/2, 104/5, 45/2 மற்றும் ராஜ் புளூமெட்டல்ஸ் சொத்துக்கள் அடமானம் வைக்கப்பட்டது. ராஜ் புளூமெட்டல்ஸ் நிறுவனத்தின் கடனை திருப்பி செலுத்திய போது, மேற்படி சொத்துக்களுக்கான ஆவணங்களை நாங்கள் பெற்றுக் கொண்டோம். ராஜ் புளூமெட்டல்ஸ் நிறுவனத்திற்காக பெற்ற கடன் அடமானக் கடன். அந்த அடமான கடன் சம்மந்தமாக நிலங்களுக்குண்டான வில்லங்களை நீக்கும்படி நில வள வங்கியிலிருந்து சார்பதிவாளர் அலுவலகத்திற்கு அறிவுறுத்தல் கடிதம் வழங்கினார்களா? என்றால் வழங்கினார்கள். அது எந்த தேதி என்றால் 2015 வருடம் ஆனால் தேதி, மாதம் ஞாபகமில்லை. அடமானத்தை நீக்கியதற்குண்டான

ஆவணங்கள் எதையும் பெற்று நான் இந்த வழக்கு சம்மந்தமாக தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். புளூமெட்டல்ஸ் நிறுவனத்திற்காக கடனை அடைத்த பொழுது, நாங்கள் பெற்ற சொத்துக்களுக்கான அசல் பத்திரங்களை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் அந்த சொத்துக்களில் 12 ஏக்கர் நிலத்தினை விற்று விட்டோம். அவ்வாறு விற்பனை செய்து தான் கடனை கட்டினோம். நிலத்தை வாங்கியவர்களுக்கு அசல் பத்திரத்தை கொடுத்து விட்டோம். நாங்கள் விற்பனையை யாருக்கு எந்த வருடத்தில் செய்தோம் என்றால் 2015-ம் வருடம், மனோகர் என்பவருக்கு விற்பனை செய்தோம். விற்பனை செய்த சொத்திற்குண்டான மூல ஆவணங்களும், தற்போது தாவா சொத்திற்கான மூல ஆவணங்களும் ஒரே ஆவணங்கள் என்று சொன்னால் சரியல்ல, வெவ்வேறு ஆவணங்கள். தாவா சொத்திற்கான மூல ஆவணங்கள் என்ன, எந்த வருடத்தை சேர்ந்தது என்று சொன்னால் எனக்கு தெரியாது, ஞாபகமில்லை. தாவா சொத்திற்குண்டான மூல ஆவணங்கள் எதையும் நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் எனக்கு தெரியவில்லை மறந்துவிட்டேன். நான் சொல்லப்படுவது போல வங்கிக்கடனை நாங்கள் செலுத்தவில்லை என்றும், மூல பத்திரங்களையும் நாங்கள் பெறவில்லை என்றும், மனோகர் என்பவருக்கு சொத்தினை விற்பனை செய்த போதும் அவரிடம் மூல பத்திரங்களை ஒப்படைக்கவில்லை என்றும், கடனை வாதி குணசேகரன் தான் செலுத்தினார் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்களை நாங்களும், எனது கணவரும் ஓட்டி அனுபவித்து வந்தோம் என்பதை காட்ட ஏதாவது கந்தாய ரசீதுகளை தாக்கல் செய்துள்ளோம் என்றால் போன வருடம் வரை நாங்கள் தான் கட்டியுள்ளோம். போன வருடம் கந்தாய ரசீதுகளை வழக்கில் தாக்கல் செய்துள்ளோம். நான் சொல்லப்படுவது போல கந்தாயம் கட்டி ரசீதினை பெறவில்லை என்றும், கந்தாய ரசீதினை இந்த வழக்கிலும் தாக்கல் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. எனது திருமணத்திற்கு பின்னிட்டு, எனக்கும், எனது கணவருக்கும் சரிவர குடும்ப உறவுகள் இல்லாததால் நான் பிரிந்து சென்று விட்டேன் என்றும், எனது கணவரை அவரது சகோதரரான வாதியின் அப்பா தான் பராமரித்து வந்தார் என்றும், அவரின் இறப்பிற்கு பின்னிட்டு வாதியின் குடும்பத்தார் தான் என் கணவரை இறக்கும் வரை பராமரித்து வந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் தான் மருத்துவமனையில் வைத்து என் கணவருக்கு சிகிச்சை அளித்தோம். எனது கணவர் இறந்த பின்னிட்டு அவரது இறுதி சடங்கானது அவர் பிறந்த வீட்டில் செய்ய வேண்டுமென்பதால், அவரின் பிரேதம் அவர் பிறந்து வளர்ந்த ஊரான ஆலாம்பாளையம் கொண்டு வந்தோம். எனது கணவருக்கு கொள்ளி வைத்த இறுதி

சடங்கினை செய்தவர் வாதி குணசேரகன் என்பவர் தான் என்றால் சரிதான். நான் எனது கணவரை விட்டு பிரிந்து விட்டதாலும், எனது கணவரை அவரது சகோதரரும், அவரது சகோதரருக்கு பின்னிட்டு மகன்கள் என்ற அடிப்படையில் வாதியும் அவரது அண்ணனும் தான் பராமரித்து வந்ததார்கள் என்றும், அவர்கள் மீதியிருந்த பாசத்தின் காரணமாகவும், கிரசருக்கு இருந்த கடனை அவர்கள் செலுத்தி வேண்டுமென்பதற்காகவும் எனது கணவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை எனது கணவரே நல்ல மனநிலையில் கடந்த 20.06.2003-ல் விருப்புறுதி ஆவணத்தை எழுதி வைத்தார் என்றால் சரியல்ல. கடந்த 26.12.2003 தேதியில் என் கணவர் இறந்துவிட்டதால், அவர் எழுதி வைத்த விருப்புறுதி ஆவணம் அமுலுக்கு வந்து, தாவா சொத்துஉட்பட கிரசர் சொத்துக்கள் அனைத்தும் வாதிக்கும், அவரது அண்ணனுக்கும் பாத்தியப்பட்டு, அவர்கள் சுவாதீன அனுபவத்தில் இருந்து வந்து, வாதி அண்ணன் இறந்த பின்னிட்டு மொத்தமாக வாதிக்கு வந்துவிட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் இந்த வழக்கில் ஆஜரான பின்னிட்டு, இந்த தாவாவில் தாக்கல் செய்யப்பட்ட விருப்புறுதி ஆவணத்தில் உள்ள கையெழுத்து எனது கணவருடையதல்ல என சொல்லி, அதை கையெழுத்து நிபுணருக்கு அனுப்பி வைக்க மனு தாக்கல் செய்தோம் என்று சொன்னால் சரிதான். அதில் வாதியின் எதிர்ப்பு எதுவுமில்லாமல் மனு அனுமதிக்கப்பட்டு, மேற்படி விருப்புறுதி ஆவணம் கையெழுத்து நிபுணருக்கு அனுப்பி வைக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். (மேற்படி கேள்வியை சாட்சியிடம் வாதி தரப்பில் வினவப்பட்ட போது, பிரதிவாதியின் வழக்கறிஞர் மேற்படி மனுவில் வாதியால் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதன் பின்னிட்டு உரிய விசாரணைக்கு பின்னிட்டு தான் மேற்படி மனு அனுமதிக்கப்பட்டது.அதனால், வாதியின் எதிர்ப்பு எதுவுமில்லாமல் மனு அனுமதிக்கப்பட்டது என்ற கேள்வியினை கேட்பது சரியல்ல என தெரிவித்தார். அது சமயம் வாதியின் வழக்கறிஞர் சம்பிரதாயத்திற்காகவே எதிருரை தாக்கல் செய்யப்பட்டதென்றும், விருப்புறுதி ஆவணத்தை கையெழுத்து நிபுணருக்கு அனுப்பி வைக்க எந்தவித ஆட்சேபணை இல்லை என்று தான் தெரிவித்தார். அது சமயம் இந்த சாட்சி தரப்பில் கையெழுத்து நிபுணருக்கு அனுப்ப வேண்டிய தாக்கல் செய்யப்பட்ட இ.ம.எண்.83/2016-ஐ பரிசீலனை செய்த போது, வாதியின் வழக்கறிஞரால் **without admitting allegation in the petition and affidavit**, **petition may be allowed** என்று தான் மேலொப்பம் எழுதி கொடுக்கப்பட்டுள்ளது. எனவே, எதிருரை தாக்கல் செய்யப்பட்டு விட்டு, வாதியின் எதிர்ப்பு எதுவுமில்லாமல் மனு அனுமதிக்கப்பட்டது என்ற வினாவினை வினவ பிரதிவாதியின் வழக்கறிஞரால் தெரிவிக்கப்பட்ட ஆட்சேபணையானது சட்டப்படி நிலைக்கதக்கதல்ல என

நிராகரிக்கப்பட்டது.) கையெழுத்து நிபுணருக்கு அனுப்பி வைக்கப்பட்ட விருப்புறுதி ஆவணம் சம்மந்தமாக என்ன அறிக்கை இந்நீதிமன்றத்திற்கு வரப்பட்டது என்ற விபரம் தெரியுமா என்றால் சுமார் 6 மாதங்களுக்கு முன்பு தான் எனது கணவரின் கையெழுத்தை ஒப்பீடு செய்ய அந்த கால கட்டத்திற்குண்டான அரசால் அங்கீகரிக்கப்பட்ட எனது கணவரின் கையெழுத்து அடங்கிய ஆவணங்களை சமர்ப்பிக்க சொல்லியிருந்தார்கள். எங்களால் அது போன்ற ஆவணம் எதுவும் சமர்ப்பிக்க இயலவில்லை. அதனால் ஒன்றும் செய்ய இயலாமல் அந்த ஆவணம் அப்படியே திரும்பி வந்துவிட்டது. இறக்கும் வரை எனது கணவர் என்னுடன் தான் இருந்தார் என்றும், எனது கணவரை நாங்கள் தான் மருத்துவமனைக்கு சிகிச்சை கொண்டு போய் சேர்த்தோம் என்றும் சொல்லப்படும் சூழ்நிலையில்,மருத்துவமனையில் சிகிச்சையின் போது எனது கணவர் தான் கையெழுத்து போட்டு கொடுத்திருப்பார் என்று சொன்னால் சரியல்ல, எனது அண்ணன் தான் கையெழுத்து போட்டு கொடுத்தார். இறப்பதற்கு முன்பாக எனது கணவர் எத்தனை வருடங்களாக சிகிச்சையில் இருந்தார் என்றால், 15 நாட்கள் தான் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார். மருத்துவமனையில் எனது கணவரை சிகிச்சைக்காக அனுமதிக்கும் பொழுது, எனது கணவர் சுய நினைவுடன் தான் இருந்தார். நான் தான் என் கணவரை சிகிச்சைக்காக அழைத்து சென்று சேர்த்தேன் என்று சொன்னால் சரியல்ல. எனது அண்ணன் தான் அழைத்து சென்று சேர்த்தார்.எந்த மருத்துவனையில் சிகிச்சைக்காக சேர்த்தோம் என்றால் மேட்டுப்பாளையத்தில் உள்ள சுபா மருத்துவமனையில் சேர்த்தோம். அந்த மருத்துவமனையில் எனது கணவரை யார் கையெழுத்து போட்டு சிகிச்சைக்காக சேர்த்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்று சொன்னால் என் அண்ணன் தான் சிகிச்சைக்காக அழைத்து சென்றார். அவர் தான் கையெழுத்து போட்டிருப்பார். ஆனால் எனக்கு யார் கையெழுத்து போட்டார்கள் என்று எனக்கு தெரியாது. அதனால் அந்த மருத்துவனையில் எனது கணவரின் கையெழுத்திட்ட ஆவணங்கள் ஏதாவது உள்ளதா? என்று அறிந்து அதை எடுத்து தாக்கல் செய்ய நாங்கள் முன்வரவில்லை என்றால் சரிதான். எனது கணவரை நாங்கள் சொல்வது போல மருத்துவமனைக்கு கொண்டு போய் சேர்க்கவில்லை என்றும்,அதனால் தான் அது சம்மந்தப்பட்ட ஆவணங்கள் எதையும் நான் இந்த வழக்கு சம்மந்தமாக தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.எனது கணவர் இறப்பிற்கு முன்பு, நானும், எனது கணவரும் ஒன்றாக சேர்ந்து வாழவில்லை என்பதால் தான் அவர் கையெழுத்திட்ட ஆவணங்கள் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது கணவர் கையொப்பமிட்ட ஆவணம் என் வசம் உள்ளது. அது போன்ற ஆவணங்கள் என்னிடமிருந்தும், அதை

அனுப்பி வைத்தால், விருப்புறுதி ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடைய கணவருடையது என்று தெரிந்துவிடும் என்பதற்காகவே நாங்கள் அனுப்பி வைக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. என் கணவருடைய கையெழுத்திட்ட ஆவணங்கள் சொத்து சம்மந்தப்பட்ட ஆவணங்கள். அந்த ஆவணங்கள் நீதிமன்றத்தின் மூலம் கையெழுத்து நிபுணரால் கேட்கப்பட்டவாறு விருப்புறுதி ஆவணம் எழுதப்பட்டதாக சொல்லப்படும் 6 மாத கால கட்டத்திற்குள்ளான ஆவணங்கள் இல்லை. அவை அதற்கு முந்தைய கால கட்ட ஆவணங்கள். எனது கணவர் கையெழுத்திட்ட பாகப் பத்திரத்தை நாங்கள் சமர்ப்பித்தோம். அந்த ஆவணம் விருப்புறுதி ஆவணம் எழுதப்பட்டதாக சொல்லப்படும் கால கட்டத்திற்குண்டான ஆவணங்கள் இல்லையென்பதால், அதை அனுப்பி வைத்தும், அதை ஒப்பீடு செய்ய இயலாதென திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுவிட்டது. விருப்புறுதி ஆவணம் எழுதப்பட்டதாக சொல்லப்படும் கால கட்டத்திற்குண்டான ஆறு மாத காலத்திற்குள்ளான ஆவணங்கள் தான் கையெழுத்து ஒப்பீட்டிற்காக தேவை என்ற விபரம் யார் மூலம் தெரிந்து கொண்டேன் என்றால் என் வழக்கறிஞர் சொல்லி தான் எனக்கு தெரியும். 6 மாத கால கட்டத்திற்குண்டான ஆவணங்கள் தான் ஓப்பீட்டிற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டுமென்ற நிபந்தனை எதுவும் சொல்லப்படவில்லை என்றும், 2000-ம் வருடம் முதல் 2003-ம் வருடம் வரையிலான மூன்று வருட கால கட்டத்திற்கான எனது கணவரால் கையொப்பமிடப்பட்ட பத்திரங்கள், ஒப்பந்தங்கள் போன்ற அங்கீகரிக்கப்பட்ட ஆவணங்கள் சமர்ப்பிக்க கோரி தான் சென்னை தடய அறிவியல்துறை ஆய்வகத்திலிருந்து 29.05.2017 தேதியிட்ட கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். அது போன்ற ஆவணங்கள் இருந்தும், அதை நாங்கள் அனுப்பி வைத்தால், விருப்புறுதி ஆவணத்திலுள்ள கையெழுத்து எனது கணவருடைய கையெழுத்து தான் என தெரிந்துவிடும் என்பதற்காக அவைகளை நாங்கள் அனுப்பி வைக்கவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் அனைத்தும், எனது கணவரால் சுய நினைவோடு, எழுதி வைக்கப்பட்டவை என்றும், அவ்வாறு விருப்புறுதி ஆவணத்தின் அடிப்படையில் எழுதி வைக்கப்பட்ட சொத்துக்கள் வாதிக்கு பாத்தியப்பட்டவை என்று சொன்னால் சரியல்ல. வாதி பெயரில் எழுதி வைக்கப்பட்டதாக சொல்லப்படும் விருப்புறுதி ஆவணத்தில் சொல்லப்பட்ட சொத்துக்களில் தான் 12 ஏக்கர் நிலத்தை நாங்கள் விற்பனை செய்தோம், அப்போதெல்லாம் வாதி மேற்படி சொத்து விருப்புறுதி ஆவணத்தின் அடிப்படையில் தனக்கு பாத்தியமென்று எந்தவித பிரச்சினையும் செய்யவில்லை. தற்போது தான் மேற்படி விருப்புறுதி ஆவணம் எழுதி வைத்தது போல சொல்லி பிரச்சினை செய்து

வருகிறார். விருப்புறுதி ஆவணத்தை படித்து பார்த்துள்ளேனா என்றால் படித்து பார்த்துள்ளேன்.அதில் மேற்படி 12 ஏக்கர் நிலம் வாதிக்கு எனது கணவரால் எழுதி வைக்கப்பட்டுள்ளதா? என்றால் ஆமாம், பி ஷெட்யூலில் கண்டுள்ள சொத்துக்கள் பூராவும் என்று வாசகம் கண்டு எழுதப்பட்டுள்ளது. அந்த பி ஷெட்யூல்களில் உள்ள சொத்துக்களில் ஒரு பகுதி தான் 12 ஏக்கர் சொத்து. நான் இதற்கு முன்பு விற்பனை செய்த 12 ஏக்கர் சொத்திற்கான மூல பத்திரம் வேறு, தாவா சொத்திற்கான மூல பத்திரம் வேறு என்று நான் சாட்சியம் அளித்தது தவறு தானே என்றால் எனக்கு வினா புரியாமல் சொன்னேன். அடமான கடனை தீர்க்கும் பொழுது, நாங்கள் விற்பனை செய்த 12 ஏக்கர் உட்பட தாவா சொத்துக்களுக்கான மூல பத்திரமான 1991 வருடத்திய பாகப்பிரிவினை பத்திரத்தை தான் நாங்கள் வைத்துள்ளோமா என்றால் ஆமாம். அந்த பாகப் பத்திரம் தற்போதும் எங்களிடம் தான் உள்ளது என்றால் ஆமாம். அந்த பாகபத்திரத்தை இதற்கு முன்பு மனோகரிடம் கொடுத்துவிட்டோம் என்று சொன்ன விபரம் தவறு தானே என்றால் பத்திரத்தை கொடுத்துதான் கிரயம் செய்து கொடுத்தோம், அது எந்த பத்திரம் என்று எனக்கு தெரியாது. பொதுவாக ஒரு மூல பத்திரம் ஆவணத்தின் மூலம் பாத்தியப்பட்ட சொத்துக்கள் முழுமையாக விற்பனை செய்யாமல் அதில் ஒரு பகுதியை மட்டும் விற்பனை செய்யும் போது, அதற்கான மூல பத்திரத்தை அந்த நபர்களுக்கு கொடுக்கப்பட மாட்டாது என்றால் சரிதான். பாகப்பிரிவினை பத்திரத்தின் அசலை ஏன் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தெரியாது. 12 ஏக்கர் நிலத்தை நாங்கள் விற்பனை செய்ய போது வாதி குணசேகரனிடம் ஏதேனும் கையெழுத்து பெறப்பட்டதா? என்றால் இல்லை. வாதி குணசேகரனுக்கு தெரியாமல் 12 ஏக்கர் நிலத்தை விற்பனை செய்தோமா என்றால் இல்லை, அவருக்கு தெரிந்து தான் விற்பனை செய்தோம். எப்படி தெரியும் என்றால் அவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை அவர் விற்பனை செய்தார், எங்களுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை ஒரே நபருக்கு தான் விற்பனை செய்தோம். பத்திர பதிவு செய்ய ஒரே நாளில் தான் சென்றோம். முதலில் எங்களது பத்திரப் பதிவு நடந்தது, அன்று நேரம் போததால் வாதியின் நிலம் விற்பனை செய்தது சம்மந்தமாக பதிவு செய்யப்பட்டது. தாவா சொத்துக்களில் எவ்வித பாத்தியமின்றி தவறான எதிர்வாதம் செய்து வருகிறோம் என்று சொன்னால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u>:-

கடந்த 17.03.2003 வருடம் எனது கணவர் ஏ.ஓ.சின்ராஜுக்கும், திம்மண்ணகவுண்டருக்கும் ஏற்பட்ட கிரய ஒப்பந்தத்தில் எனது கணவரின் கையெழுத்து உள்ளதென்றும், அதனால் அந்த ஆவணத்தை தாவா விருப்புறுதி

ஆவணத்துடன் ஒப்பீடு செய்து ஆய்வு செய்ய என்னால் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு, தடய அறிவியல் துறை ஆய்வகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டதென்றும், மேற்படி ஆவணத்தில் உள்ள ஒரு கையெழுத்தினை மட்டும் வைத்து ஒப்பீடு செய்ய இயலாதென்றும், எனது கணவரின் கையெழுத்துக்கள் அடங்கிய வேறு ஆவணங்களும் தாக்கல் செய்யும்படி தடய அறிவியல் துறையினரால் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது.

மறு குறுக்கு விசாரணை:-

17.03.2003 தேதியிட்ட கிரய ஒப்பந்த பத்திரத்தில் புளூமெட்டல்ஸ் கிரசருக்குண்டான கடன் தொகை முழுவதையும் வாதியின் தகப்பனாரும், மேற்படி ஆவணத்தின் 1-ம் நபருமான ஏ.ஓ.திம்மண்கவுண்டர் தான் கட்ட வேண்டுமென்று வாசகம் கண்டு எழுதப்பட்டுள்ளதா என்றால் ஆமாம். இது போன்று மாறி, மாறி கடனை எனது கணவரும், அவரது அண்ணனும் செலுத்த வேண்டுமென சொல்லி ஏறத்தாழ 9 பத்திரங்கள் எழுதி உள்ளார்கள். அந்த பத்திரங்கள் அனைத்தும் எனது கணவரின் மூன்றாண்டுக்கு முன்பானவை என்றால் சரிதான். அந்த பத்திரங்கள் அனைத்தும் என் வசம் உள்ளது என்றால் சரிதான். தடய அறிவியல் ஆய்வகத்திலிருந்து 17.03.2003 தேதியிட்ட பத்திரத்திலுள்ள எனது கணவரின் ஒரு கையெழுத்தினை மட்டும் வைத்து பிரச்சினைக்குரிய தாவா விருப்புறுதி ஆவணத்திலுள்ள கையெழுத்துடன் ஒப்பீடு செய்ய இயலாதென்றும், அந்த 3 ஆண்டு கால கட்டத்திற்குள் மற்ற ஆவணங்களை ஒப்பீட்டிற்காக அனுப்பி வைக்கும்படி கேட்கப்பட்டிருந்த போதும் என் வசமிருந்த 9 பத்திரங்களை ஏன் அனுப்பி வைக்கவில்லை என்றால் பதிவு செய்யப்படாத ஆவணங்கள். பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் தான் கையெழுத்து நிபுணரின் ஒப்பீட்டிற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டுமென்ற நிபந்தனை எதுவும் தடய அறிவியல் துறை ஆய்வகத்திலிருந்து விதிக்கப்படவில்லை என்றால் சரிதான். அவ்வாறான சூழ்நிலையில் அந்த ஆவணங்களை நாங்கள் அனுப்பி வைத்தால் அது வழக்கிற்கு விரோதமாக அமையும் என்பதற்காகவே நாங்கள் அனுப்பி வைக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

(S/d.)சரஸ்வதி
D.W.1

(S/d.)G.Krishnan,
District Munsif,
Sathyamangalam.